DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure).

**IN THE COURT OF** ***Special Court for trial of cases under the Prevention of Corruption Act, Salem.***

Calendar

Miscellaneous

Preliminary register

Sessions Special CC.1/2017

Deposition of witness for : P.W.12

Name : ரமேஷ்பாபு

Father's Name : பாண்டுரங்கன்

Village :

Taluk :

Calling :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act 44 of 1969 by Tmt. KALPANA, Assistant of this court on the day of 13.08.2019.

முதல் விசாரணை

நான் சேலம் Housing Development Finance Corporation-ல் சட்ட மேலாளராக பணிபுரிந்து வருகிறேன். சேலம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் துணை கண்காணிப்பாளர் அவர்கள் 11.02.2013 ம் தேதி கொடுத்த கடிதத்தின் அடிப்படையில் சேலம் திருவாக்கவுண்டனூர் ஜங்கச் மெயின் ரோடு ராஜம் காம்ப்ளக்ஸ் பங்களா தெரு, கதவு எண்.52/6-ல் குடியிருந்து வரும் திரு.பி பன்னீர்செல்வம் மற்றும் அவரது மனைவி திருமதி.விஜயா ஆகியோர்கள் கூட்டாக கடன் கேட்டு விண்ணம் கொடுத்திருந்தனர். மேற்படி வீட்டு கடன் எண் 351156114

என்ற கோப்பின் தாக்கல் செய்யப்பட்டு அதில் அவருக்கு வீடு கட்ட கடனாக ரூ.6,00,000/- 17.04.2003ம் தேதி கடன் வழங்கப்பட்டது. அவர் மாதம் வட்டி மற்றும் அசல் மாதந்தோறும் ரூ.6266/-ஆக செலுத்தி வந்தனர். அதன்படி 31.03.2004 வரை ரூ.58,084/- அவரால் செலுத்தப்பட்டது. மேற்படி அசல் மற்றும் வட்டி விவரம் செலுத்தியதற்காக Statement of Accounts copy ஐ 05.04.2013ம் தேதியின் கடிதம் வாயிலாக சேலம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் துணை கண்காணிப்பாளர் அவர்களுக்கு நான் கையெழுத்திட்டு அனுப்பி வைத்துள்ளேன். மேற்படி ஆவணங்கள் அடங்கிய கோப்பு அ.சா.ஆ.31 ஆகும். 03.05.2013ம் தேதி சேலம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் துணை கண்காணிப்பாளர் அவர்கள் என்னை விசாரித்தார்கள்.

**<u>1, 2 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

பொதுவாக வீட்டுக் கடன் என்றால் Basement, Lintel மற்றும் Roof என்று ஒவ்வொரு பணிகளும் முடிக்கப்பட்டு 3 தவணைகளில் பணம் பட்டுவாடா செய்யப்படும் என்றால் சரிதான். எதிரிக்கு மேற்படி கடனின் 3வது தவணை 13.08.2003ம் தேதி கொடுக்கப்பட்டது. மேற்படி 3 தவணைகளும் முடிந்த பிறகு, 01.09.2003ம் தேதி, முதல், எதிரி மாதத் தவணை தொகை செலுத்தி ஆரம்பித்தார். Basement, Lintel மற்றும் Roof பகுதி பணிகள் ஒவ்வொன்றும் முடித்த பிறகு நாங்கள் சென்று பார்வையிட்ட பிறகுதான் அடுத்த பகுதிக்குண்டான தொகையை பட்டுவாடா செய்வோம் என்றால் நாங்களும் விசிட் செய்துவிட்டு அடுத்த ஸ்டேஜ்க்கு உண்டான பணத்தை பட்டுவாடா செய்வோம். அல்லது பொறியாளர் அறிக்கையின் அடிப்படையிலும் நாங்கள் பணத்தை பட்டுவாடா செய்வோம். வீட்டை நேரடியாக நாங்கள் பார்வையிட்ட பிறகுதான் பணத்தை பட்டுவாடா செய்வது சட்டம் என்றால் அது சரியல்ல.

Sd/- ரமேஷ்பாபு

/True copy/

Sd/-Tmt.V.P.Sugandhi,
Special Judge,
Special court for trial of cases under the
Prevention of Corruption Act, Salem.

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure).

| | |
|---|---|
| **IN THE COURT OF** | ***Special Court for trial of cases under the Prevention of Corruption Act, Salem.*** |
| Calendar | |
| Miscellaneous | |
| Preliminary register | |
| Sessions | Special CC.1/2017 |
| Deposition of witness for | : P.W.11 |
| Name | : மல்லிகேஸ்வரி |
| Husband's Name | : ஜெயசீலன் |
| Village | : |
| Taluk | : |
| Calling | : |
| Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act 44 of 1969 by Tmt. KALPANA, Assistant of this court on the day of 13.08.2019.

<u>**முதல் விசாரணை**</u>

நான் சேலம் மாவட்டம் ஓமலூர் தாலுக்காவில் வட்டார வளர்ச்சி அலுவலராக பணியிலிருந்து 31.07.2013ம் ஆண்டு பணி ஓய்வு பெற்றுள்ளேன். ஆஜர் எதிரி பன்னீர்செல்வம் எங்கள் அலுவலகத்தில் ஒன்றிய பொறியாளராக பணியில் இருந்தார். மேற்படி எதிரி சம்மந்தமாக சேலம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் துணை கண்காணிப்பாளர் அவர்கள் 23.05.2001 முதல் 11.05.2005 வரை உள்ள காலத்திற்கு உண்டான ஊதிய பட்டியல் கேட்டு கடிதம் அனுப்பியிருந்தார். அதன் பேரில் நான் எங்கள் அலுவலக கடித ந.க

எண்.150/2013/அ-1, நாள் 01.03.2013 ன்படி எதிரிக்கு மேற்படி காலத்திற்குரிய ஊதிய பட்டியல் தயாரித்து என் கையொப்பமிட்டு சேலம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் துணை கண்காணிப்பாளர் அவர்களுக்கு அதனை அனுப்பியுள்ளேன். மேற்படி கோப்பு அ.சா.ஆ.30 ஆகும். மேலும் எதிரிக்கு 23.05.2001 முதல் 31.03.2004 வரை எதிரிக்கு ஊதியமாக ரூ.3,54,727/- மேலும் இதரபடிகளாக ரூ.1,47,009/- வழங்கப்பட்டுள்ளது. என்னை இது சம்மந்தமாக சேலம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் துணை கண்காணிப்பாளர் அவர்கள் என்னை என்னுடைய அலுவலகத்தில் வைத்து 18.06.2013 ம் தேதி என்னை விசரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை இல்லை.**

Sd/-மல்லிகேஸ்வரி

/True copy/

Sd/-Tmt.V.P.Sugandhi,
Special Judge,
Special court for trial of cases under the
Prevention of Corruption Act, Salem.

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure).

| | |
|---|---|
| **IN THE COURT OF** | ***Special Court for trial of cases under the Prevention of Corruption Act, Salem.*** |
| Calendar | |
| Miscellaneous | |
| Preliminary register | |
| Sessions | Special CC.1/2017 |
| Deposition of witness for | : P.W.10 |
| Name | : பழனிவேல் |
| Father's Name | : மலையக் கவுண்டர் |
| Village | : |
| Taluk | : |
| Calling | : |
| Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act 44 of 1969 by Tmt. KALPANA, Assistant of this court on the day of 13.08.2019.

<u>முதல் விசாரணை</u>

நான் சேலம் மாவட்டத்தில் வருமான வரித்துறையில் உதவி ஆணையாளராக பணிபுரிந்து கடந்த 30.04.2018 ம் வருடம் ஓய்வு பெற்றுள்ளேன். எங்களது ஆணையர் உத்திரவின் பேரில் திருமதி. விஜயா, க/பெ. பன்னீர்செல்வம் என்பவர் வருமான வரித்துறையில் வருமான வரி கணக்கு (IT Returns) AY- 2003-2004, 2004-2005 ஆகிய ஆண்டுகளுக்கு தாக்கல் செய்தார் AY. 2001-2002 AY, 2002-2003 ஆகிய ஆண்டுகளுக்கு IT Returns தாக்கல் செய்யவில்லை. AY 2003-2004 ஆண்டுகளுக்கு ரூ.78,550/- Business Income என்று காண்பித்து அதற்கு

வருமான வரியாக ரூ.1173/- வருமான வரியாக 2ம் எதிரி செலுத்தியுள்ளார். AY 2004-2005 ஆண்டுகளுக்கு ரூ.80000/- வருமானம் காண்பித்து Business Income என்று காண்பித்து அதற்கு வருமான வரியாக ரூ.1480/- வருமான வரியாக 2ம் எதிரி செலுத்தியுள்ளார். AY 2003-2004ம் ஆண்டுக்கான வருமான வரியை 29.10.2008 ம் தேதியில் நான்கு ஆண்டுகள் கழித்து தாக்கல் செய்துள்ளார். அது Invalid Return ஆகும். AY 2004-2005ம் ஆண்டுக்கான வருமான வரியை 29.10.2008 ம் தேதியில் நான்கு ஆண்டுகள் கழித்து தாக்கல் செய்துள்ளார். அது Invalid Return ஆகும். மேற்படி வருமானம் காட்டியதற்குண்டான ஆவண ஆதாரங்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை. இது சம்மந்தமாக 07.05.2013ம் தேதியில் மேற்படி AY க்கு 2ம் எதிரி தாக்கல் செய்த Returns Copy நான் Attestation செய்து சேலம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் துணை கண்காணிப்பாளர் அவர்களுக்கு 07.05.2013ம் தேதி அனுப்பியுள்ளேன். மேற்படி ஆவணங்கள் அடங்கிய கோப்பு அ.சா.ஆ.29 ஆகும். இது குறித்து சேலம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் துணை கண்காணிப்பாளர் அவர்கள் என்னை 08.06.2013ம் தேதி விசாரித்தார்.

**குறுக்கு விசாரணை**

விஜயா என்பவர் பெயரில் எங்கள் அலுவலகத்தில் ஒரு கோப்பு பராமரிக்கப்படும் என்றால் அது சரிதான். மேற்படி கோப்பை இன்று நான் நீதிமன்றத்திற்கு எடுத்து வரவில்லை என்றால் அது சரிதான். நான் பணியில் இருந்து ஓய்வு பெற்றுள்ளதால் மேற்படி கோப்பை நான் அலுவலத்திலிருந்து எடுக்க முடியாது. விஜயா சம்பந்ததப்பட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு போலீசார் கேட்ட விவரங்களை மட்டும் நான் அனுப்பியுள்ளேன் என்றாலும் முழு கோப்பையும் அனுப்பி வைக்கவில்லை என்றால் அது சரிதான். விஜயா செலுத்திய வருமான வரிகள் Invalid Tax என்று காரணம் காட்டி திருப்பி அனுப்பப்பட்டதா என்றால் இல்லை. எந்த ஒரு நபரும் வருமான வரி செலுத்தினால் அது ஏற்றுக் கொள்ளப்படும். ஆனால் Returns Invalid ஆக இருக்கும் பட்சத்தில் Lodged என்று எழுதி தனியாக கோப்பில் வைக்கப்படும். Invalid Returns-ஐ குறித்து விஜயாவிற்கு எழுத்து

பூர்வமாக அறிவுறுத்தியுள்ளோமா என்றால் இல்லை. முதல் விசாரணையில் விஜிலன்ஸ் போலீசார் கேட்ட விவரங்களை அவர்களுக்கு ஏற்றாற் போல் சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் அது சரியல்ல.

Sd/- பழனிவேல்

/True copy/

Sd/-Tmt.V.P.Sugandhi,
Special Judge,
Special court for trial of cases under the
Prevention of Corruption Act, Salem.